**THE LABOUR COURT, SALEM**

**I.D.No.43 of 2020**

**18.08.2023**

**RW1 – சுப்ரமணியம் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய எதுவும் இல்லை என்று சொல்லப்பட்டதால் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

மாதேஸ்வரா தியேட்டரை 01.04.2020ல் நிரந்தரமாக மூடிவிட்டேன் என்பதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. ஆப்ரேட்டர் நாகராஜனான மனுதாரருக்கு தியேட்டரை மூடிவிட்டோம் என்று எந்த ஒரு எழுத்துமூலமான அறிவிப்பு எதையும் கொடுக்கவில்லை. தியேட்டரை மூடியதற்காக மனுதாரரின் பணிக்காலத்தை கணக்கிட்டு நஷ்டஈட்டுத்தொகை கொடுக்கவில்லை. சினிமா தியேட்டரில் வேலை செய்யும் தொழிலாளிக்கு அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச கூலியை கூட கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஏப்ரல் 2019ல் அரசாங்கம் நிர்ணயித்த தியேட்டர் ஆப்ரேட்டரின் குறைந்தபட்ச பஞ்சப்படி எவ்வளவு என்று தெரியாது. நான் மனுதாரருக்கு கொடுத்த சம்பளம் எவ்வளவு என்று ஞாபகம் இல்லை.

2020ல் தியேட்டரை மூடியபோது மனுதாரரின் ஆப்ரேட்டர் உரிமத்தின் அடிப்படையில் 2020ல் அவருக்கு 53 வயது என்றால், சரிதான். மனுதாரருக்கு பணிஓய்வு வயது 60. நாங்கள் தியேட்டரை மூடியதாக சொல்வது பொய் என்றும் ஆதலால் எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆவணம் எங்களிடம் உள்ளது வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தற்போது தியேட்டர் இயங்கிவருகிறது என்றால் சரியல்ல. தியேட்டர் கட்டிடம் இடித்தாகிவிட்டது. நீதிமன்ற ஆணையர்மூலம் தியேட்டர் இயங்குகிறதா,

இல்லையா என உறுதிபடுத்தலாம் என்றால் உறுதிப்படுத்தலாம்.

நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்தபின்னர் சாட்சியின் குறுக்குவிசாரணை தொடரும்.

Sd/ (Dr.P. Murugan)
Presiding Officer,
Labour Court, Salem.